**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண்.145/2023**

2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **செல்வராஜ்** | **தொழில் :** | ஆடு மேய்த்தல் |
| **தந்தை பெயர் :** | **வீரப்பன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | இடையாத்தி வடக்கு, வேலாம்பட்டி | **வயது** | 47 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**18.03.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 23.04.1985 ல் முத்து–1,ராமசாமி–2 அவர்கள் பெரியதம்பி அவர்களுக்கு கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 24.08.2005 ல் பெரியதம்பி அவர்கள் முத்தப்பாவிற்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். 27.03.2023 ல் முத்தப்பா பெயரிலுள்ள கணினி பட்டா **வா.சா.ஆ.3**ஆக குறியிடுகிறேன். 22.04.2021 ல் முத்தப்பாவின் வாரிசுகள் லெட்சுமி–1, அமுதன்–2, சக்திபாலன்–3, சிவசண்முகம்–4 ஆகியோர்கள் எனக்கு எழுதி கொடுத்த கணினி கிரைய பத்திரம் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். 19.08.2021ல் முத்தப்பாவின் வாரிசுகள் லெட்சுமி, அரவிந்தன், அமுதன், அறிவரசி,

சக்திபாலன் , சிவசண்முகம் ஆகியோர்கள் எனக்கு எழுதி கொடுத்த கணினி கிரைய பத்திரம் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். 27.03.2023 ல் வாதியின் பெயரிலுள்ள கணினி பட்டா **வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். 28.12.2021 ல் 1ம் எதிர்வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். 12.03.2022 ல் 1ம் எதிர்வாதி எனக்கு அனுப்பிய ரீஜாய்ண்டர் வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியிடுகிறேன். 07.08.2016 ல் 1ம் எதிர்வாதி எனக்கு எழுதி கொடுத்த கிரைய உடன்படிக்கை பத்திரம் அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியிடுகிறேன்.(அசல் தற்போது தாக்கல் செய்யப்பட்டது)தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.